
128

ரு. 3 Regd. No. M. 2419



# மாத்வ மித்திரன்.

# THE MADWA MITRAN.

EDITOR:
**Adyam Bhagavatha Ranganathachariar,**
**KUMBAKONAM.**

பௌர்ணமிதோறும் வெளிவரும்.



| Vol. 8. | யுவஸம்வத்ஸரம் | No. 3. |
|---|---|---|
| புஸ்தகம் 8. | பாத்ரபத மாஸம். (21—9—35 சனிவாரம்.) | நெ. 3. |



| நெ. | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | தாத்பரிய நிர்ணயம். (ஸ்ரீமத்வாசாரியார்) | 65 |
| 2. | ஸ்ரீவாதிராஜஸ்வாமிகளின் சரித்திரம். | 72 |
| 3. | விநாயக சதுர்த்தி தகரார். | 74 |
| 4. | செய்தித்திரட்டு. | 78 |
| 5. | அப்பைய்ய தீக்ஷிதரின் அதிக்ஷேபணைகளுக்கு கண்டனம் | 80 |
| | ... விலாஸம். | 84 |
| | | 87 |
| | ...ள். | 88 |

...பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

72
N35.8.3
208730

# ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்.

## விற்பனையாகிவிட்டது.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோணம்.

## மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாஸமாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழி பெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது. இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும். எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும். பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும். பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீஸுக்கும் அறிவித்துவிடவேண்டும். பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும் ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

**மாத்வமித்திரன் பழைய வாலியங்கள் வெகு சொற்பம்தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.**


ஸ்ரீலக்ஷ்மீநாஸிம்ஹாயநம.

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्य जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

---

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

## மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்

---

இருபத்தி இரண்டாவது அத்தியாயம்

(ஸ்ரீம. வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழி பெயர்ப்பு.)

(முன் 40ம் பக்கம் தொடர்ச்சி.)

---

அப்பொழுது சைவஜ்வரன் வைஷ்ணவஜ்வரத்தால் மிகவும் ஹிம்சிக்கப்பட்டவனாய் அவனை விழுங்கிவிட ஸ்ரீ கிருஷ்ணரால் தன் வாய்க்கு சமீபம் கொண்டுபோகப்படவும் சைவஜ்வரன் ஸ்ரீ கிருஷ்ணரை சரணமடைந்தான். சைவஜ்வரத்தால் துதிக்கப்பட்ட ப்ரபுவான ஸ்ரீ கிருஷ்ணர் சைவஜ்வரனை வைஷ்ணவஜ்வரத்தினின்றும் தப்புவித்தார். உற்பத்தியற்றவரான ஸ்ரீ கிருஷ்ணர் ஸமர்த்தராயினும் யுத்த கிரீடைக்காக சைவஜ்வரம் முதலான மிகக் குறைந்தவர்களிடம் வைஷ்ணவஜ்வரத்தை சிருஷ்டித்தல் முதலிய மகாப்ரயத்தனங்களால் தனக்கு சுயமாக துக்கமில்லாமலிருப்பினும் துக்கமில்லாமல் செய்துகொண்டு அந்த சைவஜ்வராதிகளை ஜயித்திருக்கிறார். இத்யாதி காரியங்களை அஸுரஜனமோகனத்திற்காக பகவான் காட்டுகிறார். நித்தியஸ்வதந்திரனான ஸ்ரீ கிருஷ்ணருக்கு வியஸநம் முதலானவைகள் எப்படி ஏற்படக்கூடும்? ஜ்வரம் முதலான ருத்திரனின் பரிவாரங்கள் தோற்றுப்போய்

உ 66730

ஓடிப்போய்விடவும் பரமசிவனே ஸாக்ஷாத்தாய் ஸ்ரீ கிருஷ்ணரிடம் யுத்தத்திற்கு வந்து சேர்ந்தார். பரமசிவனுக்கும் ஸ்ரீ கிருஷ்ணருக்கும் யுத்தம் நடந்தது. பிறகு ஸ்ரீ கிருஷ்ணர் ஸ்தம்பிக்கச் செய்யும் ஜ்ரும்பணமென்னும் அஸ்திரத்தால் பரமசிவனை அசையாமல் செய்தார். பரமசிவன் ஒரே ஸ்தம்பமாய் எந்த எத்தனத்தையும் செய்யமுடியாமல் ஜடவஸ்துவைப்போல் நின்றுவிடவும் அஸுராவேசத்தால் ஸ்ரீ கிருஷ்ணரால் ஞானமில்லாமற்போயிருந்த பரமசிவனை ப்ரபுவான ப்ரம்மா நல்ல வார்த்தைகளால் போதித்தார். அங்கிருந்த சிவனென்னும் ஜீவனை ப்ரம்மா அழைத்துக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணரின் வயிற்றுக்குள் ப்ரவேசம் செய்தார். ஸ்ரீ கிருஷ்ணரின் வயிற்றில் ஜ்ரும்பணாஸ்திரத்தால் ஸ்தம்பித்திருந்த முற்காலத்திய சிவனுடைய ரூபத்தை இந்த சிவனுக்குக் காட்டினார். விஷ்ணுவிடமிருந்து சிவபதத்தை அடைய பில்வம் என்ற வனத்தில் சிவன் செய்த தவத்தையும் ப்ரம்மா இந்த சிவனிடம் சொன்னார். இவ்வாறு ப்ரம்மா போதித்தபின் விருஷபத்வஜரான பரமசிவன் மித்யாஞானம் விலகியவராய் ஸ்ரீ கிருஷ்ணரை ஸ்தோத்திரம் செய்தார். அச்சமயம் பாணாஸுரன் ஸ்ரீ கிருஷ்ணரிடம் யுத்தத்திற்கு வந்தான். ஸ்ரீ கிருஷ்ணர் பாணாஸுரனுடைய ஆயிரம் பாஹுக்களையும் சேதித்தார். மறுபடியும் பாணாஸுரனின் சிரச்சேதநம் செய்வதற்காக சக்ராயுதத்தை எடுத்துக்கொண்டார். அப்பொழுது பாணாஸுரனை ஸம்ரக்ஷிக்க வேண்டுமென்று இச்சையின்பேரில் பரமசிவன் ஸ்ரீ கிருஷ்ணரை நமஸ்கரிக்கவும் பாணாஸுரனிடமிருந்த அஸுராவேசத்தை நிவிருத்திசெய்து அவனைத் தன் பக்தனாய்ச்செய்து அவனுக்கு இரண்டு கைகளை மட்டில் பாக்கிவைத்து அவனை ஸம்ரக்ஷித்தார். அநிருத்தனை ஸர்பபந்தத்தினின்றும் விடுவித்து பாணாஸுரனால் பூஜிக்கப்பட்டவராய் தன் ஊருக்கு பிரயாணம் செய்தார். ப்ரபுவான ஸ்ரீ கிருஷ்ணர் மேலே சொன்னபடி பாணாஸுரனின் நகர ரக்ஷகர்களான அக்னிகளையும் அங்கிரஸ் அக்னிகளையும் சைவஜ்வரத்தையும் சிவனையும் ஷண்முகனையும் பாணாஸுரனையும் ப்ரயத்தனமன்னியில் ஜயித்து த்வாரகைக்கு பிரயாணம் செய்தார். ஸமஸ்த உலகத்தையும் நாசம் செய்யும் பரம



சிவன் எந்த ஸ்ரீ கிருஷ்ணரால் ஆயாசமன்னியில் பராஜயமடைந்தாரோ அப்பேர்ப்பட்ட அநந்தரான அந்த விஷ்ணு ஜ்வராதிகளை ஜயித்ததைக் குறித்து என்ன சொல்வது? இந்த பரமசிவனுக்கும் இந்த ப்ரம்மாவுக்கும் ஸமானர்களாய் பிந்தியும் இனியும் இருக்கும் எவ்வளவோ கணக்கற்றவர்களான சிவன்களுக்கும் பிரம்மாக்களுக்கும் சரியே, அப்படியே மகாலட்சுமிக்கும் சரியே யாருடைய கிருபாகடாக்ஷமில்லாமல் இருந்தால் அசையவும் பலமில்லையோ ஞானம் இச்சை முதலிய தர்மங்களுமில்லையோ ஸ்வரூபத்தின் இருப்பும் இல்லையோ அநந்த சக்தியான அந்த ஸ்ரீ கிருஷ்ணருக்கு ருத்திரனை ஜயித்தது ஆச்சரியமன்று. ஸ்ரீ கிருஷ்ணர் சித்திரலேகையுடன் கூடிய உஷா தேவியுடன் பேரனை அநிருத்தனை அழைத்துக்கொண்டு பலராமன் ப்ரத்யும்னன் இவர்களுடன் சேர்ந்து கருடன் மீதேறிக்கொண்டு துவாரகாபுரத்திற்கு வந்தார். நித்யாநந்தமுள்ள ஸ்ரீ கிருஷ்ணர் துவாரகாபுரியில் தன் இச்சைப்படி வெகுகாலம் க்ரீடித்தார்.

## பீமசேனர் மணிமானைக் கொன்றது.

கணக்கற்ற மகாத்மியமுள்ளவரும் மகோற்சவ ரூபியாயுமுள்ள ஸ்ரீ கிருஷ்ணரின் கணக்கற்ற இதே மாதிரியான சரிதைகள் எப்பொழுதும் மகாலட்சுமி பிரம்மா ருத்திரன் இந்திரன் சூரியன் முதலான தேவர்களால் துதிக்கப்பட்டவை. முக்திக்கு அருகமானவர்களுக்கு மோக்ஷத்தைத் தரக்கூடியவை. இவ்வாறு கணக்கற்ற பௌருஷம் வீரியம் இவைகளால் மேலானவரான நாராயணரான ஸ்ரீ கிருஷ்ணர் துவாரகாபுரியில் வசிக்கும்பொழுது இந்திரனாலும் அர்ஜுனனாலும் தூண்டப்பட்டவரான லோமசமகாமுனி பாண்டவர்களிடம் வந்து எல்லா தீர்த்தயாத்திரைகளைச் செய்விப்பதில் பாண்டவர்களுக்கு சகாயமானார்கள். பாண்டவர்கள் பூப்ரதக்ஷிணமாய் வந்து ஸமஸ்த தீர்த்தஸ்நானங்களையும் கிரமமாய்ச்செய்து அந்த எல்லா தீர்த்தங்களில் ஸ்ரீ ஹரியை மிக்க பக்தியுடன் பூஜை செய்து அந்த பூஜாதிகளால் உண்டான புண்யத்தை ஸ்ரீ கிருஷ்ணரிடம் ஸமர்ப்பிப்பதற்காக ப்ரபாஸ தீர்த்தத்திற்கு வந்தார். பிறகு பலராமருடன் கூடிய

ஸ்ரீ கிருஷ்ணர் பாண்டவர்களை மரியாதை செய்வதற்காக எல்லா யாதவர்களுடன் ப்ரபாஸத்திற்கு வந்தார். ஸ்ரீ கிருஷ்ணர் யாதவர்களின் கூட்டத்துடன் அங்கு பாண்டவர்களால் பூஜிக்கப்பெற்றார். யாதவர்கள் ஸ்ரீ கிருஷ்ணரின் ஆக்ஞையின் பேரில் பாண்டவர்களை பூஜை செய்தனர். அந்த பாண்டவர்களில் தபஸ் செய்ய உபயோகமான ரிஷி வேஷம் கொண்டிருந்த பீமசேனனைப் பார்த்து மிக்க ஸ்நேகத்தால் பலராமர் துரியோதனனை நிந்திக்கும்பொழுது ஸாத்யகி இவ்வாறு பேசினான். நாமெல்லோரும் இப்பொழுதே கர்ணனுடன் கூடிய துரியோதனாதிகளை ஸம்ஹாரம் செய்துவிட்டு அபிமன்யுவை சக்ரவர்த்தி பதவியில் ஸ்தாபனம் செய்வோம். பாண்டவர்கள் பதின்மூன்று வருஷம் முடித்துக்கொண்டு ஹஸ்தினாபுரத்திற்கு வரட்டும். ப்ரதிக்ஞை முடிந்தபின் தர்மபுத்திரர் முன்போல் ராஜ்யத்தை ஸம்ரக்ஷிக்கட்டும். என்றிவ்வாறு ஸாத்யகி சொல்லவும் ஸ்ரீ கிருஷ்ணர் பாண்டவர்களின் முகத்தைப் பார்த்து இவ்வாறு பேசினார். ஹே ஸாத்யகியே! பாண்டவர்கள் இதர ஜனங்களால் சம்பாதித்துக் கொடுக்கப்பட்ட ராஜ்யத்தில் ஆசை கொண்டவர்களல்ல. தன் புஜ சாமர்த்தியத்தால் சத்ருக்களை ஸம்ஹாரம்செய்து ராஜ்யத்தை அடையப்போகின்றனர் என்று ஸ்ரீ கிருஷ்ணர் சொல்லவும் பாண்டவர்கள் அவ்வாறே நடக்கப் போவதாய்ச்சொன்னார். பிறகு யாதவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனை முன்னிட்டுக்கொண்டு துவாரகைக்குப் போய்ச்சேர்ந்தனர். பாண்டவர்கள் கிரமமாய் ஹிமவத் பர்வதத்திற்கு வந்தனர். அந்த ஹிமவத்பர்வதத்தில் துர்கமாயுள்ள இடத்தில் நடக்கசக்தி இல்லாமல் சிரமப்பட்டவளான துரௌபதியைப் பார்த்து பாண்டவர்கள் கடோற்கசனை ஸ்மரணம் செய்தனர். பிறகு ஹிடிம்பையின் மகனான கடோத்கசன் ராக்ஷஸர்களுடன் கூடி அங்கு வந்து சேர்ந்தான். கடோத்கசன் துரௌபதியை தூக்கிக்கொண்டான். அவனுடைய வேலையாட்களான ராக்ஷஸர்கள் பாண்டவர்களை தூக்கிக்கொண்டனர். பாண்டவர்கள் பரத கண்டத்திலுள்ள பதரிகாசிரமத்திற்கு வந்து அங்கு ஸ்ரீ நாராயணரின் பூஜை என்று எண்ணி தங்களுக்கு விஹிதமாயுள்ள நித்யகர்மானுஷ்டானங்களைச் செய்துகொண்டு ருத்திரனின் மாமனான ஹிமவத் பர்வதத்தைத்



தாண்டி வடதிசைக்குப் புறப்பட்டனர். அவர்கள் ராக்ஷஸர்களின் மீதேறிக்கொண்டு ஹேமகூடபர்வதம் நிஷதபர்வதம் இவைகளைத் தாண்டி மேரு பர்வதத்திற்கு கீழ் திசையில் உள்ள கந்தமாதன பர்வதத்தில் இருந்துவரும் உத்தம பூமியான பதரிகாசிரமம் வந்தனர். அந்த பதரிகாசிரமத்தில் பாண்டவர்கள் ரிஷிசிரேஷ்டர்களால் மரியாதை செய்து கொள்ளப்பட்டவர்களாய் எப்பொழுதும் ஸ்ரீ நாராயணரை பூஜை செய்துகொண்டு மகரிஷிகளுக்கு பிரம்மவித்தையை உபதேசம் செய்துகொண்டு ஞானம் சமாதியுடன் உள்ள தபஸ்ஸை செய்தனர். இவ்வாறு பதரிகாசிரமத்தில் பாண்டவர்கள் சந்தோஷமாயிருக்கும்பொழுது ஒரு ஸமயம் பீமசேனர் துரௌபதியுடன் சேர்ந்து ஏகாந்தமாய் உட்கார்ந்துகொண்டிருக்கும் பொழுது, பகவானுக்கு உத்தம ஆஸனமாய் இருந்துவரும் கருடபகவான் கந்தமாதன பர்வதத்திலிருந்துவரும் ஆழமான ஓர் மடுவினின்றும் ஓர் ஸர்பத்தை அபகாரம் செய்தனர். அந்த கருடனின் இறக்கைக் காற்றால் அந்த கந்தமாதனம் அசையும்பொழுது துரௌபதி பீமசேனர் இவர்கள் சமீபத்தில் அப்பொழுதே உதித்த சூரியனின் காந்தி ஸமூகத்திற்கு ஸமமானதாய் திவ்ய வாசனையுள்ள ஸுவர்ணமயமான மேலான ஓர் கமல மலர் வந்து விழுந்தது. மிக்க வாஸனையுள்ள அந்த தங்கமயமான கமல புஷ்பத்தை துரௌபதி பார்த்து ஆச்சரியப்பட்டு பீமசேனரின் சாமர்த்தியம் தேவதைகளால் பொறுக்க மாளாது என்று தெரிந்துகொண்டு, அந்த கமல மலரைப்போன்ற இன்னும் அதிக புஷ்பங்கள் வேண்டுமென்று பீமசேனரை யாசித்தாள். துரௌபதியால் ப்ரார்த்திக்கப்பட்ட வாயுபுத்திரரான பீமசேனர் தேவர்கள் சித்தர்கள் இவர்களின் சமூகங்களால் சிலாகிக்கப் பட்டவராய் சிம்ஹங்கள் வேங்கைகள் முதலான ரூபங்கொண்டு அங்குள்ள அஸுரர்களை அடித்துக்கொண்டு உன்னதமான அந்த கந்தமாதன பர்வதத்தை ஏறினார். அங்கு அப்பொழுதே உதித்த சூரியன்போல் காந்தியுள்ளவரான ஹநுமார் என்னும் பெயர்கொண்ட தன் ரூபத்தின் சமீபம் வந்து சேர்ந்தார். பீமசேனர் ஹநுமாரைத் தன் ரூபம் என்று அறிந்திருந்தபோதிலும் அன்ய புருஷனுடன் விளையாடுவதுபோல் ஹநு

மாருடன் விளையாடினார். மனுஷ்ய ஜன்மம் வந்தால் தேவர்கள்
தன் ரூபங்களிலும் அன்ய புருஷன்போல் இருக்கவேண்டியது
முக்கியமான தர்மம். தன் மூலரூபத்தின் பலம் ஞானம் முதலியவை
களை இந்த ஜன்மத்தால் தன் மூல ரூபத்தால் ஏற்றுக்கொள்ளக்
கூடாது. மனுஷ்யனுடைய ஸ்வபாவத்திலேயேதான் எப்பொ
ழுதும் இருக்கவேண்டும். இது தேவர்களின் முக்கியமான தர்
மம். அந்த காரணத்தால் தான் பீமசேனர் ஹநுமார் இவ்விரு
வர்களும் ஒருவரே ஆயினும் இவ்விருவர்களில் ஹநுமார் ஜேஷ்
டர் பீமசேனர் கனிஷ்டர் என்னும் பாவனையை அடைந்தனர்.
தேவர்களுக்கு மனுஷ்ய ஸ்வபாவம் வந்தால் கிருதயுகம் முதலான
அந்தந்த யுகத்தை அநுஸரித்து அவர்களுக்கு அவர்களின் மூல
ரூபத்தைவிட கிரமமாய் க்ஞானம் பலம் முதலான எல்லா குணங்
கள் ஓர் பாகம் மறைவடைகின்றன. ஓர் பாகம் தான் வெளியா
கிறது. உத்தம தேவர்களுக்கோவெனில் அவதாரங்களில் யுகா
நுசாரமாய் மூல ரூபத்தைவிட ஏகதேசத்தில் வெளியாகாதிருக்
கும் குணங்கள் அவர்கள் அபேக்ஷித்து எடுத்துக்கொண்டால்
வெளியாகின்றன. அத்யந்தம் அபிவ்யக்தியடைந்திருக்கும்
ஸாமர்த்தியம் கொண்ட விஷ்ணுவின் மத்ஸ்யம் முதலான அவதா
ரங்களில் பலம் ஞானம் முதலானவை வெளியாகாதிருந்தது என்
பதே இல்லை. வாயு பகவான் தனக்கு வேண்டுமென்று இச்சித்
தால் அவதார ரூபத்திலும் மூல ரூபத்தின் பலம் முதலானவை
வெளியாகின்றன. சில சமயத்தில் விஷ்ணுவின் வரத்தால் தான்
பலம் முதலியவை வெளியாகின்றன. வாயு பகவானைவிட தனி
யானவர்களான சேஷாதிகளுக்கு பகவானுடைய இச்சை முத
லான காரணத்தால் பலம் முதலானவை வெளியாகின்றன. மூல
ரூபத்தின் சக்தியை ஸ்வீகரிப்பது தர்மமல்லவாதலால் பீமசே
னர் தன் தர்மம் விருத்தியடைவதற்காக தன் ரூபமான ஹநுமா
ரிடம் அன்ய புருஷன்போல் காரியத்தைக் காட்டினார்; அந்த
ஸமயம் பீமசேனர் சக்திமானாயிருப்பினும் அஸுரர்களை மோகிக்க
வேண்டியே ஹனுமாருடைய வாலைத்தூக்குவதில் சக்தி இல்லாத
தாய் காட்டினார். பீமசேனர் அந்த பர்வதத்தில் ஹனுமார் ரூபம்
விருத்தி செய்ததைப் பார்த்துவிட்டு அவருடைய வாயினின்றும்



ஸ்ரீ ராமாவதார கதையை சிரவணம் செய்து வேதோக்தமான
தாயுள்ள ஸ்ரீ ராமருக்கு இருந்துவரும் வாஸுதேவன் சங்கர்ஷ
ணன் ப்ரத்யும்னன் அநிருத்தன் என்னும் நான்கு ஸ்வரூபத்தை
யும் முக்கியமான நான்கு யுகங்களின் தர்மத்தையும் ஹனுமார்
வாயினின்றும் சிரவணம் செய்து அர்ஜுனனின் ரதத்தின் த்வஜத்
தின்மீது தான் சுயம் இருந்துகொண்டு கர்ஜிப்பதாலேயே அர்
ஜுனன் சத்ருக்களை ஜயிக்கப்போகிறான் என்று ஹனுமார் வர
னைக் கொடுத்தபின், பீமசேனர் தேவசிரேஷ்டராயுள்ள ஹனு
மாரை நமஸ்கரித்து சீக்கிரமே ஸௌகந்திகத் தாமரைகளுள்ள
வனத்திற்குச் சென்றார். மனுஷ்யர்கள் போக முடியாததாயுள்ள
அந்த குளத்திற்குப் போய் அங்கு அற்புத ரூபமுள்ள திவ்விய
மான நல்ல வாஸனைகொண்ட கமல மலர்களைப் பார்த்து மனுஷ்
யர்களை சாப்பிடும் ராக்ஷஸர்களால் தடுக்கப்பட்டும் அந்த கமல
மலர்களின் பக்கத்தில் போய்ச் சேர்ந்தார். அப்பொழுது நூறு
கோடி எண்ணிக்கையுள்ள க்ரோதவசர்கள் என்ற ராக்ஷஸர்கள்
ஆயுதம் தரித்து மேலான ரூபமுள்ளவராய் மகா பலசாலியாய்
ரூபத்தால் ஓர் நூதன அவதார புருஷராய் இருந்துவரும் பீம
சேனரை யுத்தத்தில் தடுத்தார். ருத்திரனின் வரத்தால் சத்ருக்
களால் ஜயிக்க முடியாதவர்களான க்ரோதவசர்கள் என்ற அந்த
அஸுரர்கள் சிவன் ஸர்வோத்தமன் என்று அறிவிக்கும் சாஸ்
திரங்களை சரி என்று நிரூபணம் செய்துகொண்டு ஸர்வக்ஞரும்
தபஸ்ஸுக்கு ஆசிரயரும் பலத்திற்கு ஸமுத்திரம்போன்றவருமான
பீமசேனரிடம் மகா பயங்கரமான சஸ்திரங்களையும் அஸ்திரங்க
ளையும் விருஷ்டி செய்தனர். பீமசேனர் க்ரோதவசர்களை வாக்
யார்த்த விசார ரூபமான வாக் யுத்தத்தில் விஷ்ணுவின் உத்தமத்
வத்தை நிரூபணம்செய்யும் சாஸ்திரங்களாலேயே முதலில் ஜயித்து
விட்டு அவர்கள் விருஷ்டி செய்யும் சஸ்திரார்த்தங்களை தடுத்துக்
கொண்டு அந்த க்ரோதவசர்களின் கும்பலிலுள்ள எல்லா சூரர்
களையும் கதாயுதத்தால் ஸம்ஹாரம் செய்தார். வாயு பகவானால்
குந்தி தேவியிடம் பிறந்தவராய் பலசாலியாய் சூரராய் தபஸ் உள்
ளவராய் த்வேஷிகளை ஸம்ஹரிப்பவராய் ஸத்ய தர்மத்தில் ஈடு
பட்டவராயுள்ள பீமசேனர் எப்பொழுதும் பராக்கிரம விஷயத்

தில் சத்ருக்களால் ஜயிக்க முடியாதவர். அந்த ஸௌகந்திக வனத்தில், ஜகத் மித்யை என்றும் ஈசுவரனால் உற்பத்தி யடைந்ததல்லவென்றும், ரக்ஷிக்கப்பட்டதல்லவென்றும் நானே சித்தனென்றும் நானே ஈசுவரனென்றும் சொல்லுபவர்களான யுத்தத்தில் மீர்ந்த அந்த அநேக ராக்ஷஸர்களை விஷ்ணு அநந்த கல்யாண குணமுள்ளவன், க்ஷராக்ஷரங்களினின்றும் பேதமுள்ளவன், உத்தமன் என்று ப்ரமாணங்களால் ஸ்தாபித்துக்கொண்டு வாதத்தில் ஜயித்தார். அதிவீரர்களான ஒரு லக்ஷம் க்ரோதவசர்களை பீமசேனர் ஸம்ஹாரம் செய்தார். அந்த க்ரோதவசர்கள் பீமசேனரின் வீரியம் பலங்களைப் பார்த்து வித்யா பலத்தையும் பாகுபலத்தையும் பொறுக்கும் சக்தி இல்லாமல் போய் ப்ராணனை விடுவதற்கு பதிலாய் ஓட்டம் பிடித்தனர். ஓடுபவர்களை துரத்தி அடித்து கதாயுதத்தால் ஸம்ஹாரம் செய்து எல்லோரையும் விரட்டிவிட்டு குளத்திற்குட் பிரவேசித்து அமிர்தத்திற்கு சமானமான அந்த குளத்தின் ஜலத்தைக்குடித்து குருவம்ச வீரரான பீமசேனர் அந்த குளத்தின் ஸௌகந்திக கமலங்களை பரித்தார்.

(தொடரும்)

---

# ஸ்ரீ வாதிராஜஸ்வாமிகளின் சரித்திரம்.

(முன் 19-ம் பக்கம் தொடர்ச்சி.)

சுத்த சைவ மதம் எனப்படும் லிங்காயதமதம் பார்வதி பதியான பரமசிவனுக்கு ஸம்மதமானதா அல்லவா என்பதையும் பிராம்மணர்களை ஹிம்சித்து அவர்களுடைய பூணூலை அறுத்து அவர்களை லிங்காயதர்களாய்ச்செய்தது பரமசிவனுக்கு ஸம்மதமானதா என்பதையும் நீங்கள் நான் அவருடன் செய்யும் வாதத்திலிருந்து நன்கு கண்டு கொள்ளலாம். இவரும் இந்த ஸித்தாந்தத்தில் பெரிய பண்டிதரே ஆவார். நான் சொல்வதென்னவென்றால் இவர் முதலில் 7 நாள் தொடர்ந்து இவருடைய சித்தாந்தத்தை நன்றாய் உபபாதனம் செய்து ஸ்தாபிக்க வேண்டும். நான் பிறகு 7 நாள் அவர் சொன்ன கக்ஷிகளுக்கெல்லாம் பதில் சொல்லி இவைகள் சிறிதும் வாதத்தில் நில்லாதென்பதை நன்கு காட்டிக்கொடுத்து வைதீகமானதாய் நாங்கள் பின்பற்றி வரும் சித்தாந்தம்



தான் மேலானதென்பதை நிரூபிக்கிறேன் நீங்கள் எல்லோரும் இதை கவனமாய் கேட்டிருங்கள். நான் இந்த வாதத்தில் தோற்றுப்போனால் என் மத்வமதத்தை விட்டு இவருடைய லிங்காயத மதத்தை பின்பற்றுகிறேன். இவர் தோற்றுப் போகும் பக்ஷத்தில் இவ்வளவு காலம் பிராம்மணர்களை ஹிம்சித்து அவமானப்படுத்தியதற்காக இவருக்கு எல்லோர் எதிரில் பெருத்த அவமானத்தை தண்டனையாக விதித்து இந்த ராஜ்யத்தில் காலடி வைக்கக்கூடாமல் ராஜ்யப்ப்ரஷ்டம் செய்துவிடவேண்டும். இதுவே என் கோரிக்கை இதை நீங்கள் ஆமோதிப்பீர்களென்று நம்புகிறேன் என்று ஸ்ரீ வாதிராஜர் சொல்லி முடித்தார். இதை கேட்டு எல்லோரும் மிக்க ஆச்சரியமடைந்து ஸ்ரீ வாதிராஜரின் வாக்யத்தின் காம்பீரியத்தை சிலாகித்துப்பேச அரசன் வாதத்தைத் துவக்க தன் அபிப்பிராயமிருப்பதை அறிவித்தான். லிங்காயத குரு நடுநடுங்கிப் போய் தான் தோல்வியடைவது நிச்சயம் என்று உறுதிகொண்டானாயினும் சிறிதும் அஞ்சாமல் ஏழு நாட்கள் பிரதிதினமும் பலமணிநேரம் தன் சித்தாந்தத்தை வெகு அழகாய் எடுத்துச்சொல்லி இதுவே ஸர்வோத்தமமென்ற வேத வேதாந்திதங்களால் ஸ்தாபித்து முடித்தான். பிறகு ஸ்ரீ வாதிராஜர் அவைகளை எல்லாம் கிரமமாய் சுருக்கச்சொல்லி ஒவ்வொரு அம்சத்துக்கும் சரியான தூஷணைகளை எடுத்துச்சொல்லி அவனுடைய சைவமதத்தை பலவகையாய் விகல்பம் செய்துகொண்டு பலவாறு அதை கண்டித்து விஷ்ணுவின் ஸர்வோத்தமத்வத்தை நன்கு விளக்கி ஸ்ரீ மத்வ மதத்தின் மேன்மையை ஸ்தாபித்து இதுவே பசுபதிக்கு ப்ரீதிகரமான மதமென்பதை சாமானியர்களும் நன்கு தெரிந்துகொள்ளும்படி நிரூபித்து தன் வாதத்தை முடித்தார். இதற்குமேல் வேறு எந்த கக்ஷியையும் சொல்லத் தெரியாமல் ராஜ குரு ஏங்கவும் மகாஜனங்களும் அரசனும் ஸ்ரீ வாதிராஜரின் வாதத்தில் உறுதியடைந்து லிங்காயத குருவின் வாதத்திற்கு எந்த பலமுமில்லையென்று தீர்மானித்து அவர்தான் ஸ்ரீவாதிராஜரால் தோற்றுப்போனதாய் தீர்மானம் செய்தார்கள். ராஜ குருவும் அவ்வாறே ஒப்புக்கொள்ள வாதத்திற்கு முன்பந்தயம் ஏற்படுத்திக் கொண்டபடி அந்த குருவை அவ்வூரிலுள்ள ஓர் கேவலமான தாஸியைக்கொண்டு பகிரங்கமாய் ராஜசபையின் நடுவில் இடது காலால் உதைக்கச் செய்தார். அவருடைய பூஜைசாமான்களை எல்லாம் பிடுங்கிக்கொண்டு ராஜபடர்கள் துரத்தவும் அவர் கால் நடையாய் நான்கு வீதிகளைச் சுற்றிக்கொண்டு நகரைவிட்டு வெளியே ஓடிவிட்டார், அப்பொழுது அந்த அரசன் ஸ்ரீ வாதிராஜரின் முக்யசிஷ்யஞன். முத்து ஸிம்ஹாஸனம் முத்து கிரீடம் ஸ்வர்ணபாதுகை அழகிய

சத்ர சாமரங்கள் முதலான 18 ராஜவிருதுகளை ஸ்ரீ வாதிராஜருக்கு ஸமர்ப்பித்து நமஸ்கரித்து நின்றான். தன் லிங்காயத குருவினிடமிருந்து பறிமுதல்செய்த அவருடைய பூஜா ஸாமக்ரிகளில் நந்திகேசுவரர்உள்ள பூஜாமணியை ஸ்ரீவாதிராஜருக்கு ஸமர்ப்பித்தான் லிங்காயத குருவை ஜயித்து அவனை விரட்டிய ஸம்பவம் எப்பொழுதும் ஞாபகத்திலிருக்க ஸ்ரீவாதிராஜர் அந்த நந்தியுள்ளமணியையே தன் பூஜைக்கு அன்றுமுதல் வைத்துக்கொண்டார். அந்த மணிதான் இன்றைக்கும் ஸ்ரீவாதிராஜரின் மடமாகிய ஸோதேமடத்தில் பிரதிதினம் தேவபூஜையில் உபயோகிக்கப்படுகிறது. ஸ்ரீவராஹர் ஹயக்ரீவர் முதலான விஷ்ணுமூர்த்திகளின் பூஜாகாலத்தில் இந்த நந்திவைத்த மணி உபயோகிக்கப்பட்டுவருவதற்கு காரணம் லிங்காயத குருவின்மீது ஸ்ரீவாதிராஜர் வெற்றிபெற்றதே. இந்த அரசரின் பெயர் நரஸப்பநாயகனென்றும் இவன் விஜயநகர சக்ரவர்த்தியான ஸ்ரீவெங்கடபதி மகாராஜாவின் கீழ்இருந்த சிற்றரசனென்றும் ஸோதையிலுள்ள ஸ்ரீத்ரிவிக்ரம தேவாலயத்திலுள்ள ஓர் சிலாசாசனத்தால் தெரியவருவதாய் சொல்லப்படுகிறது, (தொடரும்)

---

# விநாயகசதுர்த்தி தகரார்

---

இத்தென்னாட்டில் விசேஷமாய் பெரும்பாலோரால் அனுஷ்டிக்கப்படும் தஞ்சாவூர் பஞ்சாங்கங்களில் 1—9—35 பானுவாரத்தன்று விநாயகசதுர்த்தி என்று போடப்பட்டிருந்தும் நாம் எமது பத்திரிகையிலும் காலண்டரிலும் மறுநாள் 2—9—35 சோமவாரத்தன்று மாத்வர்கள் அனுஷ்டிப்பது சாஸ்திரஸம்மதமென்று அறிவித்த அபிப்பிராயத்தைத்தழுவி எல்லா ஊர்களிலும் அநேகர் அவ்வாறே அனுஷ்டித்திருப்பதாய் அறிய மிகவும் சந்தோஷப்படுகிறோம். ஆயினும் எமது முக்யநண்பர் திருவல்லிக்கேணி ஸ்ரீமதே. கௌஸிகியதுநாதாசாரியார் அவர்கள் 30—8—35 ஹிந்துபத்திரிகையில் பானுவாரத்தன்றுதான் அனுஷ்டிக்கவேண்டுமென்று பிரசுரம்செய்ய அதை மறுத்து சைதாபேட்டை ஸ்ரீமான் P. S. நரசிம்மராவ் அவர்கள் 31-8-35 ஹிந்துபத்திரிகையில் எமது அபிப்பிராயத்தை வெளியிட்டதால் இது சம்பந்தமான பிரமாணங்களை விஸ்தாரமாய் அறிய எமது



வாசகர்கள் ஆவல்கொண்டு எமக்கு அறிவித்திருப்பதன் நிமித்தம் அவைகளை இங்கு சிறிது ஆராய்வோம். எந்த விரதம் எந்த திதியில் அனுஷ்டிக்கப்படவேண்டியதோ அந்த திதி அந்த பூஜா காலத்தில் இருக்கும் நாளை அந்த விரதத்திற்கு நாம் எடுத்துக் கொள்ளவேண்டுமென்பது ஸாமானியமான முறை. விநாயக சதுர்த்தி விரதம் மத்யான்ஹம் செய்யப்படவேண்டியதால் சதுர்த்தி மத்யான்ஹத்திலுள்ள நாளை நாம் அந்த விரதானுஷ்டானத்திற்கு எடுத்துக் கொள்ளவேண்டியதாகும். சதுர்த்தி திதி அதற்கு முந்திய த்ருதியாதிதியோடும் கலந்திருக்கலாம் அல்லது பஞ்சமிதிதியோடும் கலந்திருக்கலாம். இவைகளில் ஸங்கஷ்ட சதுர்த்தி நாகசதுர்த்தியைப் போலில்லாமல் இந்த விநாயக சதுர்த்திக்கு த்ருதீயையுடன் கலந்ததான சதுர்த்தியை எடுத்துக் கொள்வது சிலாக்யம் என்று அறிவிக்கப்பட்டு அதற்கு ஆதாரமாக அடியிற்கண்ட பிருஹஸ்பதிவசனம் எல்லா தர்மசாஸ்திரகாரர்களாலும் எடுக்கப்பட்டது. அந்த பிரமாணமாவது "சதுர்த்தீகண நாதஸ்ய மாத்ருவித்தா ப்ரசஸ்யதே। மத்யான்ஹவ்யாபினீ சேத்ஸ்யாத் பரதஸ்சேத்பரேஹனி॥" இதன் அர்த்தமாவது "கணநாதஸ்ய சதுர்த்தி மத்யான்ஹவ்யாபினீ சேத் மாத்ருவித்தாப்ரசஸ்யதே। பரத: மத்யான்ஹவ்யாபினீ சேத் கணநாதஸ்ய சதுர்த்தீ பரே அஹனிஸ்யாத்॥" சதுர்த்தி மத்யான்ஹத்திலிருந்தால் த்ருதியையுடன் கலந்த சதுர்த்தி சிலாக்யம். மறுநாள் சதுர்த்தி மத்யான்ஹத்திலிருந்தாலோ கணேச சதுர்த்தி மறுநாள்தான் ஆகும் என்று தெரியவருகிறது. மறுநாள் மத்யான்ஹத்தில் சதுர்த்தி வியாப்தி இருந்தால் மறுநாள் விநாயகசதுர்த்தி என்று முடிவு செய்யப்பட்டதிலிருந்து மறுநாள் அவ்வாறு மத்யான்ஹவ்யாப்தி இல்லாமலிருந்தால்தான் முந்தியநாள் அதாவது த்ருதியையுடனுள்ள நாளில் கணேசசதுர்த்தி செய்யப்படலாமென்பதற்கு இது பிரமாணம் என்று இதன் அர்த்தத்தை யோசித்தாலேயே ஸ்பஷ்டமாய் விளங்குகிறது. இந்த அர்த்தம் நிர்ணயஸிந்துவின் ஆசிரியரான கமலாகரபட்டராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அவர் சொல்வதாவது:—பரதினே ஏவ அம்சேன ஸாகல்யேன வா மத்யான்ஹவ்யாப்த்யபாவே ஸர்வ

பக்ஷே—ஈ பூர்வா க்ராஹ்யா ததாஹி சதுர்த்தீகணநாதஸ்ய.......॥ மறுநாள் ஸ்வல்பமாகவோ சம்பூர்ணமாகவோ மத்யான்ஹவ்யாப்தி இல்லாமலிருந்தால் முந்தியநாள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றுசொல்லி இந்த பிரமாணத்தைக் காட்டுகிறார். ஆகையால் இந்த சுலோகத்திற்கு நாம் சென்ற இதழில்சொன்ன அர்த்தமே பிரமாணிகமாகும். தர்பஸிந்து முதலான ஸ்மார்த்தர்களின் தர்ம சாஸ்திர கிரந்தங்கள் மாத்ருவித்தாப்ரசஸ்யதே என்னும் வாக்கியத்தை திடமாகப் பிடித்துக்கொண்டு முடிவான வாக்யத்தில் திருஷ்டிவைக்காமல் கௌரீதிதியாகத் த்ருதியையுடன் சேர்ந்த நாள் கணேசசதுர்த்திக்கு ப்ரசஸ்தமென்று சொல்லப்பட்டிருப்பதைக்கொண்டு மறுநாள் மத்யான்ஹவ்யாபிதிருந்தாலும் முந்திய நாள்தான் செய்யப்பட வேண்டுமென்று அபிப்பிராயம் தரவும், எமது மாத்வ தர்மசாஸ்திரகாரர்கள், இதர தர்மசாஸ்திரகாரர்கள் மாறாய் சொல்லியிருப்பதை ஆக்ஷேபித்து தங்கள் அபிப்பிராயத்தை அறிவிக்கும் வழக்கத்தைஅனுசரித்து, தங்கள் தர்மசாஸ்திரங்களில் மறுநாள்தான் செய்யவேண்டுமென்று அறிவித்திருக்கின்றனர். சலாரிஸ்மிருத்யர்த்த ஸாரமென்னும் நூலில் மறு நாள் மத்யான்ஹவ்யாப்தி இல்லாமலிருந்தால்தான் முந்திய நாள் செய்யப்படவேண்டுமென்று அறிவித்திருக்கிறார். ஸ்ரீமான்களான M. ராமராவ் அவர்களும் கௌலகி யதுநாதாசாரியார் அவர்களும் முந்திய நாள் அதிக வ்யாப்தி இருப்பதால் அன்று செய்யப்படவேண்டுமென்று சொன்னதற்கு எந்த பிரமாணமும் இல்லை; மேலும் இந்த கிரந்தங்களில் மேலே காட்டியிருக்கும் ஸ்பஷ்டமான வசனங்களைக்கொண்டு மறுநாள் மத்யான்ஹ வியாப்திஸ்வல்பமாகவோ அல்லது அதிகமாகவோ இல்லாமலிருந்தால்தான் முந்திய நாள் செய்யப்படவேண்டுமே யல்லாது மறுநாள் ஸ்வல்பவ்யாப்தி இருந்தாலும் அன்று தான் செய்யப்படவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சேஷாசாரி ஆசாரியாள் இயற்றியிருக்கும் ஸ்மிருதி பூஷணமென்னும் நூலிலும் "ப்ரதிநே மத்யான்ஹ வ்யப்தௌஸத்யாம் பூஜாகார்யா॥ நோசேத் பூர்வதிநேகார்யா." மறுநாள் மத்யான்ஹவ்யாப்தி இல்லாமலிருந்தால்தான முந்தியநாள் செய்யவேண்டுமென்று



அறிவித்திருக்கிறார். சலாரி சேஷாசாரியார் இயற்றியிருக்கும் நிர்ணய ரத்னமென்னும் நூலிலும் இந்த அபிப்பிராயம் தான் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாண்டில் இருந்தது போல் இரண்டுநாட்களிலும் மத்யான்ஹவியாப்தி இருந்தால் இரண்டு நாட்களிலும் செய்யப்படலாமென்றும் ஆனால் இவ்விரண்டு தாங்களில் த்ருதியா ஸம்பந்தமான நாளில் செய்யப்படுவது சிலாக்யமென்றும் ப்ரசஸ்யதே என்னும் வாக்யம் இதை சூசிக்கிறதென்றென்றும் கக்ஷிசொன்னால், சதுர்த்தி மத்யான்ஹவியாப்தி இருந்து பஞ்சமி கலந்திருக்கும் பக்ஷத்தில் அன்று செய்வது சிலாக்யமென்று ப்ரசஸ்யதே என்ற வாக்யத்துடன் மற்றொரு ஸ்மிருதியையும் அவர் காட்டியிருக்கிறார். அந்த ஸ்மிருதியாவது:— மாத்ருவித்தா ப்ரசஸ்தாஸ்யாத் சதுர்த்தி கணநாயகே। மத்யான்ஹே பரதஸ் சேத்ஸ்யாத் நாகவித்தா ப்ரசஸ்யதே॥ இதன் அர்த்தமாவது கணேச சதுர்த்தி த்ருதியையுடன் சேர்ந்திருந்தால் ப்ரசஸ்தம் மத்யான்ஹவ்யாப்தி மறுநாள் இருந்துவிட்டால் பஞ்சமிசேர்ந்த சதுர்த்திதான் ப்ரசஸ்தம். இதனால் ப்ரசஸ்தமென்பது இரண்டு நாளுக்குமுண்டு என்று ஏற்படுகிறது. இந்த ஸ்மிருதி வசனம் அபிரசித்தமென்று சொல்வதற்கில்லை. மாதவீயத்தில் இந்த வசனம் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. நிர்ணய ஸிந்துவிலும் இந்த வசனம் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. பானுவாரமும் மங்களவாரமும் சேர்ந்தால் விசேஷமான புண்யமுண்டு என்று சொல்லியிருப்பதைக்கொண்டு இவ்வருடம் பானுவாரத்தன்று செய்வது ப்ரசஸ்தமென்று சொல்லவும் முடியாது. அன்று செய்யப்படலாமென்பது மத்யான்ஹவியாப்தி முதலான இதர விதிகளால் ஏற்பட்டு அந்நாள் பானுவாரமாகவே இருக்கும் பக்ஷத்தில் அது விசேஷ பலனைத் தரக்கூடியதாய் சொல்லலாமே ஒழிய அன்று செய்யப்படவேத சாஸ்திர ஸம்மதமாயில்லாதிருக்கையில் விசேஷ புண்யத்தை தருவதெப்படி? ஆதலால் தான் மறு நாள் சதுர்த்தியன்று மத்யான்ஹ வ்யாப்தி இருக்கும்பக்ஷத்தில் விநாயகசதுர்த்தியை சதுர்த்தியன்று செய்வதுதான் விநாயகருக்கு ப்ரீதிகரமாய் ப்ரசஸ்தமாகுமென்று எமது மாத்வகிரந்தங்களால் தெரியவருவதைக்கொண்டு சோமவாரத்தன்று விநாயகசதுர்த்தியை மாத்வர்கள் செய்வதுசாஸ்திர ஸம்மதமென்று அறிவிக்கப்பட்டதென்பதை எமது வாசகர்கள் குறிப்பிடக் கோருகிறோம்.

# செய்தித்திரட்டு.

ஸ்ரீமுஷ்ணக்ஷேத்திரத்தில் நாளது ௵ ஆகஸ்டு௴ 15, 16, 17௳ களில் ஸ்ரீமான் கஜேந்திரம் ஸ்ரீனிவாஸாசாரியாரின் வசூலின்பேரில் ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் புண்யதினம் வெகுவாய்க் கொண்டாடப் பட்டதென்றும் வேதபாராயணம் ஹரிபஜனை முதலியவைகளுடன் ஸ்ரீராகவேந்திரரின் படம் ஊர்வலம் கொண்டுவரப்பட்டதென்றும், பிராம்மண சந்தர்ப்பணை முதலியவை விசேஷமாய் நடந்ததென்றும், ஸ்ரீமுஷ்ணம் சாமாசாரியார் அறிவிக்கிறார்.

பண்ருட்டி ஸ்ரீகுரு ராகவேந்திரஸ்வாமிகளின் ஆராதனை சபையின் ஆதரவில் ஸ்ரீமவே கோபிநாதாசாரியாரைக்கொண்டு நடத்தப் பட்டுவரும் 7-வது வருஷத்திய மகா ஆராதனையாக ஆகஸ்டு மாதம் 15, 16, 17, 18 தேதிகளில் இவ்வாண்டு உற்சவம் பண்ருட்டியில் வெகு சிறப்பாய் நடந்ததென்றும், மங்களவாத்யம் வேதகோஷங்கள் இவைகளுடனும் சத்ரசாமராதி பிருதுக்களுடனும் ஸ்ரீராகவேந்திரரின் திருவுருவப்படம் ஊர்வலம் கொண்டுவரப்பட்டதென்றும் பிராம்மண சந்தர்ப்பணை பஜனை முதலியவை வெகு சிலாக்யமாய் சம்பிரதாயப் படி நடந்ததென்றும் ஸ்ரீயான்களான திருவாதி விஜயீந்திராசாரியார் அவர்களால் மோக்ஷம் என்பதைப்பற்றியும் திருவல்லிக்கேணி பிரபஞ்சம் ஸ்ரீனிவாசாசாரியார் அவர்களாலும் சிதம்பரம் B. N. கிருஷ்ணமூர்த்தி சர்மா M.A., அவர்களாலும் ஸ்ரீராகவேந்திரரின் மஹிமையைப்பற்றியும் கள்ளக்குருச்சி வக்கீல் உ. வே. T. A. தாதாசாரியார் அவர்களால் ஸ்ரீராம பக்தி என்பதைப்பற்றியும் உபன்யாஸங்கள் நடந்ததென்றும் ஸ்ரீமான்களான மானாமதுரை ஹரிதாஸர் ஸ்ரீனிவாஸ பாகவதர் அவர்களால் சகுந்தோபாக்யானமும், கும்பகோணம் பாளேகட்டே மத்வராயாசாரியார் அவர்களால் மயூரத்வஜோபாக்யானமும் திருக்கோயிலூர் ராமுடு பாகவதர் அவர்களால் சீதா கல்யாணமும், ஹரிகதை செய்யப்பட்டதென்றும் அநேகர் வெளியூரிலிருந்து வந்திருந்தனரென்றும் இவ்வாறு சிலாக்யமாய் நடத்திவைத்த அனைவருக்கும் தம்முடைய வந்தனம் அளிக்கப்படுகிறதென்றும் ௸ சபையின் காரியதரிசி ஸ்ரீமான் ஆர். ரகூத்தமராவ் அறிவிக்கிறார்.

தாராபுரம் ஸ்ரீஸமீரகிங்கர சபையின் ஆதரவின் கீழ் 15, 16, 17௳ களில் ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் புண்யதினம் கொண்டாடப்பட்டதென்றும் முதல் நாள் ஸ்ரீமான் சப்ஜட்ஜ் D. S. ராஜா ராவ் அவர்



களாலும் இரண்டாம் நாள் கொளத்துப்பாளையம் ஸ்ரீமான் சஞ்சீவி ராயராலும் மூன்றாம் நாள் கோயமுத்தூர் வைத்தியரங்காசாரியாராலும், ஆராதனை பிராம்மண சந்தர்ப்பணை முதலியவை நடத்தப்பட்டதென்றும் 16௳யன்று ஸ்ரீமான் தேவாசாரியாரால் ஸ்ரீராகவேந்திரரின் திவ்விய சரித்திரம் உபன்யஸிக்கப்பட்டதென்றும் 17௳யன்று ௸ ரங்காசாரியாரால் பஜனை செய்யப்பட்டதென்றும், 24௳யன்று ஸ்ரீமான் புராணம் ராமாசாரியாரால் ருக்மணி கல்யாணமும் 31௳யன்று ஆஸ்திக மித்திரன் ஆசிரியர் ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி பாகவதரால் ஸ்ரீவத்ஸலா பரிணயமும் ஹரிகதையாய் நடத்தப்பட்டதென்றும் ௸ சபையின் காரியதரிசி அறிவிக்கிறார்,

மதுரை ப்ரம்மவித்யாச்ரம ஸபையின் ஆதரவின் கீழ் பாரிஸ்டர் ஸ்ரீமான் K. L, வெங்கட்டராம் அவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் 3—9—35௳யன்று ஸ்ரீமான் ராமகிருஷ்ணாசாரியாரால் மத்வ மதத்தைப்பற்றியும் 19௳யன்று ஸ்ரீமான் ரங்காசாரியாரால் பகவன் மஹிமையைப்பற்றியும் 31௳யன்று ஸ்ரீமான் ராமகிருஷ்ணாசாரியாரால் மத்வ விஜயமும் மாத்வமித்திரனும் என்னும் விஷயமாய் மத்வவிஜயத்தை படித்து விமரிசை செய்து த்வைதாத்வைத கேஸ் பைசலான அறிக்கை வெளியானதை பிரஸ்தாபித்தும் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாத்வ ஸபையினரும் மாத்வரும் பிரசாரகராய் இருந்து மாத்வமித்திரன் பத்திரிகையை ஆதரவளித்து போஷித்துவரவேண்டுமாய் வற்புறுத்தி உபன்யாஸம் செய்யப்பட்டதென்றும் அக்கிராசனாதிபதியும் முடிவுரையில் அவ்விதமே வற்புறுத்தி தீர்மானிக்கப்பட்டதென்றும் உபன்யாஸ காலங்களின் பகவத்பாதாளின் படம் அர்ச்சிக்கப்படுகிறதென்றும் அச்சபை காரியதரிசி அறிவிக்கிறார்.

கோயமுத்தூர் ஸ்ரீமத்வஸித்தாந்த புபுத்ஸு ஸபையின் ஆதரவின் கீழ் ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் 265-ம் வருஷத்திய புண்யதினம் 16௳யன்று கொண்டாடப்பட்டு ஸ்ரீமான் ராஜமகேந்திரம் சேஷாசாரியாரால் அவருடைய சரித்திரம் உபன்யஸிக்கப்பட்டதென்றும் அன்று மாலை ராஜவீதி தெப்பக்குளம் ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகள் கோயிலில் உடுபி பேஜாவர மடாதிபதி ஸ்ரீவிசுவமான்யதீர்த்தஸ்வாமிகளின் அக்கிராஸனத்தின்கீழ் மடாதிகாரி ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸாசாரியாரால் அதி ருசிகரமாய் அவருடைய ஜீவிய சரித்திரம் உபன்யஸிக்கப்படவும் ஸ்ரீஸ்வாமிகளும் தாம் கண்கூடாய் கண்ட சில அனுபவங்களைச் சொல்லி ஸ்ரீராகவேந்திரரின் மகிமை விளக்கப்பட்டதென்றும் ஸ்ரீமான் T. G. கோகுலசந்திரராவ் அறிவிக்கிறார்.

## அப்பைய தீக்ஷதரின் ஆக்ஷேபணைகளுக்கு கண்டனம்.

(முன் 48-ம் பக்கம் தொடர்ச்சி.)

அதாவது:— "கதம் அவகதம் ப்ரயோகாபாவ இதி யதி தர்ஹி உபலப்தௌ யத்ன: க்ரியதாம்"

ஓர் சப்தம் தமக்கு கிடைக்கவில்லை என்ற காரணத்தால் அவ்வாறு ப்ரயோகமில்லை என்று சொல்லிவிடலாகாது தனக்கு கிடைக்கவில்லையே என்றால் அது கிடைக்க ப்ரயத்தனம் செய்ய வேண்டியது அவசியம். 'மஹான் ஹி சப்தப்ரயோகஸ்ய விஷய: ஸப்தத்வீபா வஸுமதி த்ரயோ லோகா: சத்வாரோ வேதா: ஸாங்கா: ஸரஹஸ்யா: பஹுதா பின்னா. ஏகசதமத்வர்யுசாகா: ஸஹஸ்ரவர்த்மா ஸாமவேத: ஏகவிம் சதிதாபாஹ்வ்ருச்யம் நவதாதர் வணோவேத; வாகோ வாக்யம் இதிஹாஸ புராணம் வைத்யகம் இதி ஏதாவான் சப்தப்ரயோகஸ்ய விஷய: ஏதாவந்தம் சப்தஸ்ய விஷயமநு நிசம்ய நஸந்த்யப்ரயுக்தா: சப்தா இதிநிர்வசனம் கேவலம் ஸாஹஸமாத்ரமேவ சப்த ப்ரயோகமாகி இருக்கும் இடம் மிக்க பெரியதாய் இருக்கிறது. ஸப்தத்வீபங்கள் இருக்கின்றன. பூலோகமிருக்கிறது. மூன்றுலோகங்கள் இருக்கின்றன. வேதங்கள் நான்கு இருக்கின்றன. அவைகளின் அங்கங்கள் ரஹஸ்யங்கள் பலவாறு பிரிவுகளிலிருக்கின்றன. யஜுர்வேதத்தில் நூற்றொன்று சாகைகளும் ஸாமவேதத்தில் ஆயிரத்திஎட்டு சாகைகளும் ரிக்வேதத்தில் பாப்ரவ்யம் இருபத்திஒன்று சாகைகளும் அதர்வணவேதம் ஒன்பது சாகைகளுமிருக்கின்றன. அதைத் தவிர வாகம் வாக்யம் இதிஹாஸபுராணம் வைத்யகம் என்று இவ்வாறு சப்தப்ரயோகம் செய்திருக்கும் ஸ்தானங்கள் இவ்வளவு பெரியதாய் இருக்கின்றன. இவ்வளவு இடத்தையும் பாராமல், இவ்வாறு ப்ரயோகமாகியிருக்கும் பதங்களில்லை என்று சொல்லிவிடுவது மிக்க துணிச்சலான காரியம் என்று ஸ்பஷ்டமாக கூறியிருக்கிறார். அப்படியே அவர் ஸ்மிருதி அதிகரணத்திலும் ஔதும்பரீ ஸர்வா வேஷ்டயிதவ்யா" என்ற ஸ்மிருதி இருப்பதற்கு மூலாதாரவாய் சுருதி இருக்கவேண்டுமென்று அனுமானம் செய்வதில்



"ஔதும்பரீம் ஸ்பிருஷ்ட்வா உத்காயதி" என்று ப்ரத்யக்ஷமான சுருதிக்கு இது விரோதமாயிருப்பதால் இப்பேர்ப்பட்டதான ஸ்மிருதிக்கு மூலபூதமான சுருதிகள் இருக்காது என்றும் ஏனெனில் அவைகள் கிடைக்கவில்லை என்றும் சபராசாரியார் நிரூபிக்கவும், பட்டபாதர், "ஸ்வயம் அல்பக்ஞேன அநுபலம்பாத் நநாத்ஸ்தி இத்யத்யவஸாய: கர்த்தும் சக்யதே" வேறு சாகையில் அவ்வகை வேதம் காணப்பட்டு விட்டால் உன் தீர்மானம் தப்பல்லவா? என்று மகா பாஷியத்திலுள்ள நியாயத்தின்படி அல்பக்ஞருக்கு கிடைக்கவில்லை என்றதால் அவ்வாறு இல்லை என்று முடிவுசெய்து விடமுடியாது என்று இவ்வாறு கண்டித்திருக்கிறார். உங்கள் ஆசாரியாள் விஷயத்தில் அவர் ஆப்தர் என்று சந்தேகமிருப்பதால் அவருடைய வசனத்தையை எவ்வாறு நம்புவது என்றால் மேற்சொன்ன "ஔதும்பரீ ஸர்வாவேஷ்டயிதவ்யா" என்னும் ஸ்மிருதி வாக்யத்தைக்கொண்டு அதற்கு ஒத்ததான சுருதி இருப்பதாய் எப்படி நிச்சயிப்பது. அதைச்சொன்னவர் விஷயத்திலும் ஆப்தபாவம் சம்சயப்படவேண்டியதுதானே வரும். இப்படி எல்லா விஷயத்திலும் சந்தேகப்பட்டுக்கொண்டிருந்தால் "நஸுராம் பிபேத்" கள்ளைக் குடிக்கலாகாது என்று சொல்லும் வேதத்திலும் ந என்ற வார்த்தை தவறிப்போய் பரம்பரையாய் அந்த சுருதியை அத்யயனம் செய்துவருபவர்களில் ஏன் வந்திருக்கலாகாது என்றும் சந்தேகப்படலாம். இந்த ஸம்சயம் சரி என்று நீங்கள் ஒப்புக்கொள்ளமுடியுமா? ஆகவே இவ்வாறு சம்சயப்படுவது சரியல்ல என்பது நீங்களே ஒப்புக்கொள்ளவேண்டியது ஆகும். வேறு யாரோ ஒருவர் ஏதோ ஒரு வாக்யத்தை சுயமாக கல்பனை செய்துகொண்டு அதை கமட சுருதி முதலான பெயர்களால் அழைத்தால் ஒப்புக்கொண்டுவிடுவதா என்று கேட்டால் அது பிரசித்தமான வேதத்திற்கு அனுகூலமாயிருக்கிறதா விருத்தமாயிருக்கிறதா என்பதை விமரிசை செய்யவேண்டும். விருத்தமாயிருந்தால் முதலெடுப்பில் அது அபிரமாணமென்றே தள்ளிவிடலாம். ஏனெனில் அது பிரசித்தசுருதிக்கு விரோதமாயிருக்கிறது. அனுகூலமாயிருந்தால் அது ஏன் பிரமாணமாகமாட்டாது. வேதத்திற்கு அனுகூலமாயுள்ளது வேதத்தை மூலமாகக்கொண்டிருக்கும் என்று

நிச்சயிக்கலாமல்லவா? மேலும் உமக்கு அபிரசித்தமான சுருதிகளில் தானே அவைகள் எமது ஆசாரியாளால் கல்ப்பிக்கப்பட்டதோ என்ற சந்தேகம். அந்த அபிரசித்தமான சுருதிகள் உமக்காகவென்று சொல்லப்பட்டவைகளன்று. எமது ஆசாரியாளின் பெருமையையும் ஆப்த பாவத்தையும் நன்கு கண்டுகொண்ட எங்களைப்போன்ற அவர்களின் சிஷ்யர்களுக்காகவென்று அவைகள் பாஷியாதிகளில் உதாஹரிக்கப்படுகின்றன. நாமிருவரும் ஒப்புக்கொண்ட எங்கும் பாடமுள்ள பிரசித்தமான சுருதிகளும் ஸ்மிருதிகளும் உமக்காக உதாஹரிக்கப்பட்டிருக்கின்றனவென்பது நிச்சயமான விஷயம். ஏனெனில் எங்களில் கலகமான விஷயம் முக்யப்ரமேயமான ஜீவப்ரம்மபேதம் ஜகத் ஸத்யம் முதலியவை. அந்த விஷயத்தில் எமதுகக்ஷியை ஸ்தாபித்து உங்கள் கக்ஷியை தகர்க்க த்வாஸுபர்ணா ஸயுஜா ஸகாய, விச்வம் ஸத்யம் முதலான பிரசித்தமான சுருதிகள் உபன்யஸிக்கப்பட்டு அத்வைத பரமான தத்வமஸி முதலான சுருதிகளின் அர்த்தாந்தரம் ஸாவகாசமாயிருக்கிறதாயும் இன்னும் பல கக்ஷிகளும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த முக்யமான ப்ரமேயங்களைச்சொல்ல நீங்கள் வாதாடும் இந்த அபிரசித்தமான சுருதிகளை எமது ஆசாரியாள் உபயோகிக்கவில்லை. இதைத் தவிர்த்துள்ள இதர ஸூக்ஷ்மமான ப்ரமேயங்களை தமது சிஷ்யர்களுக்கு அறிவிக்கவேண்டி எமது ஆசாரியாள் சில சுருதிகளை உதாஹரித்திருக்கிறார். திருஷ்டாந்தமாவது "யதாவாஞ் மனஸி ஸம்பத்யதே" என்ற சுருதியின் அர்த்தத்தை நிர்ணயம் செய்வதற்காக அதாவது வாக்கும் மனஸும் சேருகிறது என்று அறிவிக்க "உமாவை வாக் ஸமுத்திஷ்டா மனோருத்ர உதாஹிருத"; வாக் என்பது பார்வதி என்றும் மனஸ் பரமசிவனென்றும் ஸூக்ஷ்மமான விஷயத்தை அறிவிக்க சில சுருதி உதாஹரிக்கப்படவும் அது அபிரசித்தமாயிற்றே என்று நீர் குறைகூறுகிறீர். இதனால் உமக்குவந்த பாதகமென்ன. அபிமானி அதிகரணத்தின்படி வாக் முதலான சப்தங்களுக்கு அபிமானி தேவதாபரமாய் அர்த்தம் செய்வது பொருந்துமல்லவா? இதற்கு விருத்தமாக பிரமாணமும் வேறு இல்லாமலிருக்கும்பொழுது இதை ஏன் நீங்கள் ஒப்புக்கொள்ளக்கூடாது. உங்கள் ஆசாரியார் பௌத்தர்களுடன்



விவாதம் செய்து கிரந்தங்களை எழுதியிருக்கும் பொழுது அவர்கள் ஒப்புக்கொள்ளாததான வேதவாக்யங்களை ஏன் உதாஹரித்திருக்கிறார். பௌத்தர்களின் கக்ஷியை நிறுத்த அவர்களுக்கு அனுமானாதிகளால் பதில் சொல்லப்பட்டிருக்கிறதென்றும் தங்கள் சிஷ்யர்களுக்கு இந்த விஷயத்தில் உறுதி ஏற்பட வேதவாக்யங்கள் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறதென்றும் நீங்கள் கக்ஷிசொல்வது போல் உங்கள் கக்ஷியை நிறுத்த நீங்கள் ஒப்புக்கொண்டிருக்கும் பிரஸித்தமான சுருதிகள் எமது ஆச்சாரியாளால் உதாஹரிக்கப்பட்டிருக்கிறதென்றும் தம்சிஷ்யர்களுக்கு தாம்சொல்லியிருக்கும் ப்ரமேயங்களில் உறுதி ஏற்பட அபிரசித்தமானதாய் ஸூக்ஷ்மமான, சுருதிகள் உதாஹரிக்கப்பட்டிருக்கிறதென்றும் நாம் பதில் சொல்வதில் என்ன ஆக்ஷேபணை உண்டு. உங்கள் கக்ஷியை நிறுத்த நீங்கள் ஒப்புக்கொண்டிருக்கும் சுருதிகளே எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. இதர அபிரஸித்தமான சுருதிகளின் விஷயத்தில் நீங்கள் பௌத்தர்களைப்போலவே இருங்கள். அவைகள் உங்களுக்காக சொல்லப்படவில்லை. பிரசித்தமானதாய் நீங்கள் ஒப்புக்கொண்டிருக்கும் சுருதிகளாலும் யுக்தி முதலியவைகளாலும் உங்களுடைய ப்ரமேயங்களெல்லாம் எமது ஆசாரியாளால் கண்டிக்கப்படவும், எமது ஆசாரியாள் உங்கள் ஆசாரியாளைவிட மிகவும் மேலானவர் என்று நிச்சயித்து உங்கள் ஜாதியார்களில் மகாபண்டிதரான த்ரிவிக்ரமாசாரியார் சாமிசாஸ்திரி முதலியோர் உங்கள் மதம் கால்காசுக்கும் பொறாது என்றும் துச்சமென்றும் தெரிந்துகொண்டு உங்கள் மதத்தைக் குறைத்துக்காட்டும் அநேக நூல்களை இயற்றியிருக்கின்றனர். நீங்களோ "தாதஸ்ய கூபோய மிதிப்ருவாண: க்ஷாரம் ஜலம் காபுருஷா: பிபந்தி" இதோ என் தந்தை இறக்கிய கிணர் என்று சொல்லிக்கொண்டு அதன் உப்புஜலத்தை குச்சிதபுருஷர்கள் குடிப்பார்கள் என்னும் நியாயத்தை அனுசரித்து அந்த அத்வைதமதத்தைத் தழுவிக்கொண்டு கக்ஷிபேசிவருகிறீர்கள். நீங்கள் உதாஹரித்திருக்கும் "சதுர்பிஸ்ஸஹ சிஷ்யை: சசங்கரோ அவதரிஷ்யதி" என்னும் வாக்யத்தைக்கொண்டு சாக்ஷாத் பார்வதி பதியே சுயம் சங்கராசாரியார் ரூபத்துடன் அவதரித்து அத்வைதத்தை ஸ்தாபித்திருப்பதாய் உங்கள் நூலில்

சொல்லியிருப்பதைக்கொண்டும் "மாயாவாதம் அஸத் ஸாஸ்த்ரம் ப்ரச்சன்னம் பௌத்தமுச்யதே மயைவ கதிதம் தேவிகலௌ ப்ராம்மணரூபிணா" மாயாவாதம் அஸத்தான ஸாஸ்திரம். அது மறைவான பௌத்தமதம். நான்தான் கலியில் பிராம்மணரூபத்துடன் சொல்லியிருக்கிறேன் என்று பாத்மபுராணத்திலிருப்பதைக்கொண்டும் சங்கரனின் அவதாரமான உங்கள் சங்கராசாரியார் எமது ஆநந்த தீர்த்தாசாரியாரால் கக்ஷியில் தோற்றுப்போயிருப்பதைக் கொண்டே எமது ஆசாரியாள் சங்கராதிகளுக்கு உத்தமமான முக்யப்ராணரின் அவதாரமென்று நிச்சயமாகிறது. அதனால் பலித்தா முதலான ப்ராணுக்கினி ஸூக்தத்தால் அவர் சொல்லப்படுவது முற்றிலும் பொருந்தும்.

(தொடரும்.)

---

# சங்கரலீலா விலாஸம்.

---

(முன் 44-ம் பக்கம் தொடர்ச்சி.)

மைசூர் மகாராஜா காலேஜ் லெக்சரர் ஸ்ரீமான் H. சுப்புராவ் M. A., எழுதுவதாவது:—

இதைக் கேட்டு மயங்கி அந்த வைதிகன் வீடுபோய் சேர்ந்தான். இதன் அர்த்தம் என்னவென்றால் ப்ரமம் ஏற்பட்டிருக்கும் காலத்தில் புலப்படும் வெள்ளிக்கு முத்துச்சிப்பி உபாதான காரணமாய் ஆவதுபோல் ப்ரம்மம் ஜகத்துக்கு உபாதான காரணன் என்றும், சிப்பி வெள்ளிக்கு உபாதான காரணம் அல்லவென்பதும் எல்லோரும் ஒப்புக்கொண்டது. அதாவது ப்ரம்மம் விவர்த்தோபாதனம் என்றால் ப்ரம்மம் உபாதானமே என்று சங்கராசாரியார் சொன்னார். இது ஓர் வஞ்சனை.

(12) மேலும் சங்கராசாரியார் "முமுக்ஷோ: கர்மஸன்யாஸ விதானாத்" என்றார். அதாவது அதாதோ ப்ரம்மஜிக்ஞாஸா என்று வேதாந்த சாஸ்திரத்தை வாசிக்க ஆரம்பித்த முமுக்ஷு என்ற குணங் கொண்ட அதிகாரி யாரோ அவன் கர்மாவை விட்டுவிடவேண்டு மென்றார். சுத்தவைதிகப்பிச்சு இதைக் கேட்டுவிட்டு தன்னுடைய கபடமான யாகங்களால் ஜனங்களை மோசம்செய்யவும் யாகத்தின் நியமத்தாலாவது மாமிஸத்தின் ருசிபார்க்கவும் பசுவைக்கொல்ல பழக்கப்படுத்திக்கொள்ளவும் சந்தர்ப்பமில்லாமல் போயிற்றே என்று வருத்தப்படவும் வியாவஹாரிகமான காருண்ய திருஷ்டியால் பூர்ணரான அந்த ஜகத்குரு



"வர்ணிதஸ்சாஸ்மாபி: வித்வத் அவித்வத்பேதேன கர்மவிதய:" முதலான வார்த்தைகளைச்சொல்லி சமாதானம் சொன்னார். அக்ஞ திருஷ்டியால் கர்மாதிகள் உபபன்னமாகின்றன. "ப்ராம்மண்யாதிக மாரோப்ய ஸர்வேகர்மவிதய: ப்ரவர்த்தந்தே" ஆரோபிதமான ப்ராம்மண்யத்தால் எல்லா விதிகள் உபபன்னமாகும். ஆரோபிதப்ராம்மண்யம் உன்னிடத்தில் இருக்கிறது என்று சொன்னார். வைதிகப்பிச்சுவோ ஓர் பசுவுக்கு ஸமானன். என்னசெய்தான். தன்னுடைய வைதிகத் தன்மைக்கும் ப்ராம்மண்யத்திற்கும் நாசத்தை அறிவிக்கும் இந்த வாக்யங்களைக் கேட்டு இதன் மர்மத்தை அறியாமல் மிகவும் சந்தோஷப்பட்டுக்கொண்டு வீடுபோய் சேர்ந்தான். இவ்வாறு சங்கராசாரியார் சொல்லியதால் என்ன ஏற்படுகிறது. அரசன் செய்யும் உத்திரவுகள் அக்ஞதிருஷ்டியால் உண்டு என்றும் ஞானி திருஷ்டியால் இல்லையென்றும் சொல்ல வேண்டும். அக்ஞதிருஷ்டியால், ப்ராம்மண்யம் ஸ்மார்த்தர் வைஷ்ணவர்கள் முதலானவர்களிடமிருக்கிறது. ஞானிதிருஷ்டியால் பூணூல் கயிற்றை தரித்தவர்களெல்லோருமே பிராம்மணர்கள் ஆவார்கள் அல்லது ப்ராம்மணர்கள் யாரும் இல்லைதான். எல்லோரும் ஒன்றே என்று ஏற்படுகிறது. இக்காலத்திலேயும் இப்படித்தான் நவீனநாகரீகமுள்ளவர்கள் பேசுகின்றனர். இதனால் ஆரோபிதமான ப்ராம்மண்யம் மகமதியர்களிடமும் வந்து சேரக்கூடும். ஆக இப்பேர்ப்பட்ட திருஷ்டிபேதங்களை கல்பிக்கும் சமத்காரம் கல்பனைசெய்பார்களில் சிரேஷ்டனான காதம்பரிகாரனுக்கும் இல்லை, இது ஓர் பெருத்த வஞ்சனை.

(13) ஈசுவரன் சிருஷ்டிகர்த்தா என்று சங்கராசாரியார் சொன்னார், இதைக் கேட்டவுடன் வைதீகப்பிச்சு கூத்தாடினான். உடனே, இந்திரஜால வித்தைக்காரன்போல என்று தன் மதத்தின் தத்வத்தைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு சேர்த்தார். ஆக பலிதமான அர்த்தமென்னவென்றால் இந்திரஜால வித்தைக்காரன் மாமரத்தை சிருஷ்டி செய்யவில்லை. அதுபோலவே இந்த ஈஸ்வரன் ஜகத்தை சிருஷ்டிக்கவில்லை என்று அர்த்தம் ஏற்பட்டது. இதனால் இந்த ஒரே வார்த்தையாலேயே ஈஸ்வரனுடைய எல்லா மகிமைகளை களவாடின பெரியவஞ்சனை வெளியாகிறது.

(14) மற்றொரு சந்தர்ப்பத்தில் சங்கராசாரியார் "ஆத்மாசப்ரம்மா" என்றார். அதாவது ஜீவன்தான் ப்ரம்மா என்றார். இதைக் கேட்டுவிட்டு வைதீகப்பிச்சு ப்ரம்மம் ஜீவபாவத்தை அடைவதெப்படி என்று ப்ரச்சனம் செய்தான். அதற்கு சங்கராசாரியார் அவித்யையால் என்று பதில் சொன்னார். அவித்யை என்பது சங்கராசாரியாரின் செல்லப்பேச்சு, ஹிருதய மாணிக்யம், விளையாட்டுக்கிளி, எங்கும் தாராளமாய் உபயோகப்படுத்துவார். சூரியன்போன்ற பிரம்மத்துக்கு அந்தகாரம்போன்ற அவித்யை எப்படி வந்தது! பூனையைப் போன்ற பிரம்மத்துக்கு மூஷிகம்போன்ற அவித்யை எப்படிவந்தது? ப்ரகாசரூபமானப்ரம்மத்திற்கு ஜடமான அவித்யை எப்படி வந்தது? பூர்ண

வியாப்தமாயுள்ள ப்ரம்மத்திற்கு பரிச்சின்னமான அவித்யை எப்படி வந்தது? இத்யாதி ப்ரச்னைகளைச்செய்தால் சங்கராசாரியார் பதில் சொல்லமாட்டார் தான். ஆனால் தன்னுடைய மதம் சரியாக இல்லை என்று ஒப்புக்கொள்ளும் ஒழுங்கு அவரிடம் இல்லை. சில வைதிகர்கள் சபையின் நடுவில் தப்பானதைச் சொல்லிவிட்டால் கபடமாக அந்த தப்பை ஸாதிக்கப்பார்ப்பார்கள். சில பையன்கள் அநியாயமென்று தெரிந்து கொண்டபின்பும் தன் அடத்தை அழுது ஸாதிக்கப்பார்ப்பார்கள். ப்ரக்ருதத்தில் அவித்யை ஏற்படுவதற்கு நிர்குணப்ரம்ம வாதத்தில் கொஞ்சமேனும் அவகாசமில்லை, எப்பேர்பட்ட யுக்தியையும் சொல்லமுடியாது என்பது சங்கராசாரியாருக்கு தெரிந்ததே. அத்வைத பண்டிதர்கள் சொல்வதாவது "துர்கடத்வமவித்யாயா; பூஷணம் நது தூஷணம்| கத்ம்சித் கடமானத்வே அவித்யாத்வம் துர்கடம் பவேத்|| என்றால் யுக்தியால் நிரூபணம் செய்ய முடியாதது தான் அவித்யையின் லக்ஷணம். யுக்தியால் நிரூபணம் செய்யமுடியுமானால் அது அவித்யை என்று எப்படி ஆகும் || என்று சொல்லுகின்றனர். இந்த பேச்சில் காணப்படும் தத்வக்ஞானத்தின் முழுமூடத்வத்தை நாம் என்னவென்று வர்ணிப்பது? இதன் அடர்ந்த அக்ஞான இருளை முக்கண்படைத்த பரமசிவனும் மூன்று கண்களையும் திறந்து எவ்வளவு தேடினாலும் கண்டு பிடிக்கமுடியாது.

முடிவாக யோசிக்கும்பக்ஷத்தில் அவித்யையின் பூர்வோத்தரங்களை சரியாய் நிரூபிக்க முடியாவிட்டால். அவித்யை என்னும் வஸ்துவே ஸித்திப்பதில்லை. அவித்யை என்னும் அஸித்தமான வஸ்துவை அங்கீகரிப்பதால் சங்கராசாரியாரின் அவித்யாவாதம் அப்ராமாணிகம் என்று தானே ஏற்படுகிறதல்லவா? அவித்யை உண்டென்றும் யுக்தியால் நிரூபிக்கமுடியாததே அதன் லக்ஷணம் என்றும் ஸித்திப்பதில்லை. ஓர் வாதத்தின்மீது ஓர் தோஷத்தை எடுத்துச்சொன்னால் அந்த வாதம் பொய்யைச் சொல்லுகிறது என்றும் அப்ராமாணிகமென்றும் ஒப்புக் கொள்ளத் தகுந்ததல்லவென்றும் ஸித்திக்குமேயல்லாது அந்த வாதம் அஸத்யத்தைச் சொல்லக்கூடியது என்றும் தோஷங்கொண்டிருப்பதே அதன் ஸ்வபாவம் என்றும் ஸித்திப்பதில்லை. உன் தர்மபத்னி வியபி சாரம் செய்திருக்கிறாள்; ஆதலால் அவள் தர்மபத்னி அல்ல என்று ஒருவன் சொன்னால், அவள் தர்மபத்னிதான், வியபிசாரம் செய்வதே தர்மபத்னியின் லக்ஷணம் என்று பதில் சொன்னவனுடைய சாதுரியத்தைக்கண்டு மெச்சுகிறதோ அல்லது பொய்யாக இவ்வாறு பேசுகிறவனைக்கண்டு கோபிப்பதோ, என்று யோசிக்கவேண்டும். மேலும் சிலர் எங்கள் அவித்யை வேசி ஸ்திரீபோல் என்று சொல்லுகின்றனர். நித்ய ப்ரம்மசாரியான ப்ரம்மத்தினிடம் இவள் அணுகுவது எப்படி என்றும், வந்தாலும் அவள் என்னசெய்யக்கூடும் என்றும் நாம் கேட்டால், ப்ரம்மசாரிகளை கெடுப்பதே வேசிஸ்திரியின் ஸ்பாவம் என்று பதில் கூறுகின்றனர். இப்படிப்பேசியும் அவர்கள் இஷ்டம் ஸித்திப்பதில்லை. நித்ய



ப்ரம்மசாரியின் சமீபத்தில் எப்பேர்ப்பட்ட வேசி ஸ்திரீயானாலும் ஒன்றையும் செய்துவிட முடியாது என் மகன் நித்யப்ரம்மசாரி என்று ஒப்புக்கொண்டு அவன் வேசிக்கு ஆளாகிவிட்டானென்றும் ப்ரம்மசாரியைக் கெடுப்பதே வேசியின் ஸ்வபாவம் என்றும் சொல்வது எவ்வாறு பரஸ்பரம்விரோதமாய் புத்திமான்களால் ஏற்றுக்கொள்ளாததோ அப்படித்தான் நிர்குணப்ரம்மம் ஒருவன்தான் இருக்கிறான் என்று சொல்லிவிட்டு அவன் அவித்யையால் கிரஹிக்கப்பட்டிருக்கிறானென்றும் அந்த அவித்யையின் ஸ்வரூபத்தைச்சொல்ல முடியாமலிருப்பதே அதன் லக்ஷணமென்றும் சொல்லும் வாதம் புத்திமான்களால் நிராகரிக்கத் தகுந்ததாய் இருக்கிறது.

சூரியனுக்கு அந்தகாரம் இருள்வந்து சேருவதெப்படி? இருள் எவ்வகையிலும் சூரியனிடம்தோன்ற காரணமில்லையே என்றுகேட்டால் புத்திசாலியாயிருப்பவன் சூரியனிடம் இருள் இல்லை தான் என்று நிச்சயிப்பான். சங்கராசாரியாரோ, சூரியனிடம் இருள் இருக்கிறது என்றும் ஆனால் இருள் இருக்கிறதற்கு காரணம் இல்லையே என்று சொல்வது நிஜமென்றும் இருள்காண காரணமில்லாமல் இருப்பதே இருளின் ஸ்வபாவம் என்றும் சொல்லுகிறார். கோர்ட்டில் நியாயாதிபதி சாக்ஷிக்காரனைப்பார்த்து ப்ரதிவாதி ஸத்யவாதியே, அவன் ஒரேவகையாய் பேசியிருக்கிறான். உன் வார்த்தைகள் பரஸ்பரம் விருத்தமாயிருப்பதால் அவனுடைய ஸ்டேட்மெண்டை தள்ளமுடியவில்லை என்று சொன்னார். அதற்கு சங்கராசாரியாரின் பள்ளிக்கூடத்தில் வாசித்து சிக்ஷையடைந்திருக்கும் ஸாக்ஷிகாரன் என் வார்த்தைகள் ப்ரதிவாதியின் ஸ்டேட்மெண்டை நாசம்செய்வதில் ஸமர்த்தமாகத்தானிருக்கின்றன என் வார்த்தைகள் பரஸ்பரம் விருத்தமாயும் யுக்திகள் இல்லாமலிருப்பதும் உண்மையே. பரஸ்பரம் விருத்தமாயிருப்பதே என்பேச்சின் ஸ்வபாவத்தின் லக்ஷணம். இதனால் பாவாயில்லை என்றான். நியாயாதிபதி இதைக்கேட்டு என்ன தீர்ப்பு அளிப்பார் என்பதை வாசகர்களே நிச்சயிக்கலாம். (தொடரும்.)

---

# விளம்பரம்.

---

## மாத்வமித்திரன் பழைய வாலியங்களின் தவணை விலைச் சீட்டு.

சென்ற இதழில் பிரசுரித்திருந்தபடி முதல் 7-வாலியங்களும் மாதம் 1-க்கு ரூ ஒன்று வீதம் ஒன்பது மாதத் தவணைவிலையில் கொடுக்கப்படுவது நிச்சயம். ஆனால் குறைந்த பக்ஷம் நூறு சந்தாதாரர்கள் சேர்ந்தால்தான் இவ்வாறு குறைந்த விலைக்குக் கொடுக்கப் படும். ஆதலால் ஆங்காங்குள்ள மாத்வமித்திரன் வாசகர்கள் தங்க

ளாலியன்றவளவு சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுத்து எல்லோரும் இந்த சீட்டின் விசேஷமான சௌகரியத்தைப் பெறுவார்களாக. 27—10—35 ஆசுவீஜமாஸம் அமாவாசை முதல் இந்த சீட்டு அமுலுக்கு கொண்டுவரப்படுமாதலால் சந்தாதாரர்களாய்ச் சேரவிரும்புவோர் முந்திக்கொள்ள பிரார்த்திக்கப்படுகிறார்கள். மற்ற விவரங்கள் சென்ற இதழில் அதாவது புஸ்தகம் 8 செம்பர் 2 பக்கம் 55—64-ல் காண்க.

மானேஜர் மாத்வமித்திரன்,
ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

## விசேஷதினங்கள்.

ஆசுவீஜமாஸம்.

| | | |
|---|---|---|
| 28—9—35 | சனிவாரம் | நவராத்திரி ஆரம்பம் |
| 4-10—35 | சுக்ரவாரம் | ஸரஸ்வதி ஆவாஹனம் |
| 5-10—35 | சனிவாரம் | ஸரஸ்வதி பூஜை |
| 6-10—35 | பானுவாரம் | மகாநவமி. ஆயுதபூஜை |
| 7-10—35 | சோமவாரம் | விஜயதசமி, மத்வஜயந்தி, ஸரஸ்வதி விஸர்ஜனம், சிரவணம், விஷ்ணு ப. உப. இல்லை, சிரவண உப. இல்லை |
| 8-10—35 | மங்களவாரம் | ஏகாதசி உப. |
| 12-10—35 | சனிவாரம் | பௌர்ணமி, கார்த்திகஸ்நானம் ஆரம்பம், விஷ்ணு ப. உப |
| 17-10—35 | குருவாரம் | துலாஸ்நானம் ஆரம்பம் |
| 23-10—35 | புதவாரம் | ஏகாதசி உப. |
| 24-10—35 | குருவாரம் | த்வாதசி ஸாதனிமணி 6--39க்குள் பாரணை |
| 25-10—35 | சுக்ரவாரம் | தீபாவளி இரவு பண்டிகை, சந்திரோதய காலத்தில் அப்யங்கம் |
| 26-10—35 | சனிவாரம் | தீபாவளி பகல் பண்டிகை. தர்சம் லக்ஷ்மீ பூஜை |
| 26-10—35 | பானுவாரம் | விஷ்ணு ப. உபவாஸம் |

## சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

இப்பத்திரிகையின் ஆசிரியர் விசேஷநிர்பந்தத்தால் அதிக நாட்கள் வெளியூரில் தங்கிவிட நேர்ந்ததால் இந்த மாதத்திய மித்திரனை வழக்கப்படிக்குள்ள பக்கங்களுடன் சரியானகாலத்தில் வெளியாக்க முடியாமற்போனதை குறித்து சந்தாதாரர்கள் மன்னிக்கக்கோருகிறோம் [ப—ர்]

208730

## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவைகளின், தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற்கூலி அணா 0—1—0.

ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம்:— தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

துவைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தொகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

வருட சந்தா ரூ. 3 Regd. No. M. 2419.


# டி. எஸ். ஆர்.
## அண்டு
# கம்பெனி
## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909

தந்திவி ...
"கோ ...ல்"

எங்கள் வாஸனாதிரவியசா...யில்
தயாரித்து விற்பனைக்கு தயாரா...
இருக்கும் ஸாமான்களின் விபர...

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கரி ஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னானப்பவுடர் | கொப்பரைச்...வல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூ...ந்தல் |
| அம்பர், அரகஜா | பற்பொடி [தை... |
| தசாங்கம் | ஊதுவத்திகள் |

சந்தனாதித்தைலம்
அரைக்கீரைவிதைத் தை...
மற்றும் அநேகவாஸனை சாமான்களும் ...ம்.
கேட்லாக்குக்கு எழுதுங்க...


Printed at Sri Venkateswar Printing W...
Published by Bhagavatha Ranganathachariar, ...m...onam.